*1*

# வாழ்த்துதல்: ஒரே விதமான விசுவாசத்தை உடையவர்களுக்கு

## (1:1, 2)

*2 பேதுருவில், அப்போஸ்தலனின் அதிகாரம் ஒரு பிரச்சனைக் குரியதாயிருக்கிறது. உற்சாகப்படுத்தும் நோக்கம் கொண்ட ஒருவனைவிட கடிந்து கொள்ளும் ஒரு போதகனுக்கு அதிகமான அதிகாரம் தேவை. பேதுருவின் வாசகர்களில் சிலர் கள்ளப் போதகர்களின் கவர்ச்சிகரமான சொற்களில் கட்டுண்டு இருந்தனர். கிறிஸ்தவர்கள் அப்போஸ்தலர்களின் வார்த்தைகளைக் கொண்டு கள்ளப் போதகர்களை எதிர்கொள்ளும்போது அந்த அப்போஸ்தலரின் அதிகாரமே பிரச்சனைக்குரியதாகிறது. இந்தக் காரணத்தால், ஆசிரியர் தன்னை அடையாளப்படுத்துவதில் எச்சரிக்கையாக துவக்க வசனத்தை எழுதுகிறார். அவருடைய வார்த்தைகள் கவனமாக ஒழுங்குபடுத்தப்பட்டு நிருபத்திலிருக்கும் பய உணர்வை தெளிவாக்கும் பொருட்டு எழுதுகிறார்.*

### *வாழ்த்துரைத் துவக்கம் (1:1, 2)*

**[1]நம்முடைய தேவனும் இரட்சகருமாயிருக்கிற இயேசு கிறிஸ்துவினுடைய நீதியால் எங்களைப்போல அருமையான விசுவாசத்தைப் பெற்றவர்களுக்கு, இயேசு கிறிஸ்துவின் ஊழியக்காரனும் அப்போஸ்தலனுமாகிய சீமோன் பேதுரு எழுதுகிறதாவது: [2]தேவனையும் நம்முடைய கர்த்தராகிய இயேசுவையும் அறிகிற அறிவினால் உங்களுக்குக் கிருபையும் சமாதானமும் பெருகக்கடவது.**

***வசனம் 1.*** NASB மொழிபெயர்ப்பு திருமறை இந்த நிருபத்தை சீமோன் பேதுரு என்று துவக்கினாலும். மூலப்பிரதியின் சான்று "சிமியோன்" என்றே வார்த்தைக் கூட்டெழுத்துக்களில் கொண்டுள்ளது.[1] "சைமன்" எனும் பதம் *(Simon)* பெயரைச் சுருக்கிச் சொல்வதன் விளைவு அது கிரேக்க மொழிக்கு பொழிப்புரையாகச் சொல்லுவது. "சிமியோன்" *(Sumeon),* என்பதும் கூட "சைமியோன்," என்று எபிரெய/அராமிக் உச்சரிப்புக்குச் சமீபமான சொல். அது ஒரு பொதுவான பெயராக இருந்தது. செப்துவஜிந்த்தில் வழக்கமாக "சிமியோன்" என்று வார்த்தைக் கூட்டுச்சொல்லில் வருகிறது. புதிய ஏற்பாட்டில், "சிமியோன்" என்று இங்கும் அப்போஸ்தலர் 15:14லும் மட்டும்

*பேதுரு அழைக்கப்படுகிறார். 2 பேதுரு பலஸ்தீன சந்தர்ப்பத்தில் எழுதப் பட்டிருக்கக் கூடுமானால், பேதுரு தனது பெயரை பழையகால முறைப்படி தனது துவக்க வசனத்தில் குறிப்பிட்டிருக்கிறார்.*

*அந்த "சிமியோன்" என்பது ஒரு பொதுவான பெயராக அந்த நேரத்தில் இருந்தது என்பதை புதிய ஏற்பாட்டு உபயோகத்தின் மூலம் சுட்டிக்காட்டப்படுகிறது: சிமியோன் என்பவர் இயேசு அவருடைய பெற்றோர்களால் தேவாயலத்தில் ஒப்புக்கொடுக்கப்பட (பிரதிஷ்டைபண்ண) போன போது அவர்களை சந்தித்தார் (லூக்கா 2:25, 34). அவர் இயேசுவின் வம்சாவழியில் வருகிறவர் (லூக்கா 3:30), மேலும் அந்தியோகியாவில் அவர் ஒரு போதகனாகவும் தீர்க்கதரிசிகளில் ஒருவராகவும் இருந்தார் (நடபடிகள் 13:1). கீழ்வரும் குறிப்புகளை எளிமையாக்கும் பொருட்டு, "சீமோன்" எனும் வார்த்தைக்கான கூட்டெழுத்துக்களையே நாம் பயன்படுத்துவோம்.*

*சுவிசேஷத்தில், குறிப்பாக யோவானில், "சீமோன் பேதுரு" எனும் பெயர் அடிக்கடி இடம் பெறுகிறது. அந்திரேயாவைக் குறித்து முதன்முதலாகக் குறிப்பிடும்போது, அவரை "சீமோன் பேதுருவின் சகோதரன்" என்று சொல்லப்படுகிறது (யோவான் 1:40), ஒன்றன் பின் ஒன்றாக வரும் இப்பெயர் அவ்வேளையில் காலக் கணக்கிற்குப்பின் வழு சார்ந்ததாகக் குறிப்பிடப்பட்டது. தொடர்ந்து வரும் சம்பவத்தில், அந்திரேயா "சீமோனை" இயேசுவினிடத்தில் கூட்டி வந்தார். அவர்களுடைய முதல் சந்திப்பில், இயேசு அப்போஸ்தலனை அராமிக்கில் "பேதுரு" என்று பொருள் கொடுக்கும் பெயருக்குச் சமமான "கேபா" என்றழைத்தார். இரண்டு வார்த்தைகளின் அர்த்தமும் "கல்" என்பது தான், ஆனால் பேதுரு கேபா என்று இங்கு சுவிசேஷங்களில் மட்டுமே அழைக்கப்படுகிறார். பேதுரு என்று பவுல் அவரை கலாத்தியரிலும் 1 கொரிந்தியரிலும் குறிப்பிடுகிறார். அப்போஸ்தலனுக்கு பவுலின் தெரிவு செய்யப்பட்ட பெயர் கேபா. "சீமோன்" மற்றும் "பேதுரு" எனும் பெயர் "இயேசு" மற்றும் "கிறிஸ்துவைப்" போல ஒரு தொகுப்புப் பெயர், அது ஒரு சரியான பெயர் அமைப்பைக் கொடுக்க ஏதுவாக, "சீமோன்பேதுரு" எனப் பட்டது. இரண்டு பெயர்களின் தொகுப்பைக் குறிப்பிடும்போது நாம் எந்தவித முக்கியத்துவமும் கொடுக்க வேண்டுமென்பதல்ல; ஆகிலும், அப்போஸ்தலன் பழைய கால அமைப்புப் படியான பெயரை பயன்படுத்தி "சிமியோன்," என்று தனது வாசகர்கள் புரிந்து கொள்ளத்தக்கதாக அடையாளமாகக் கொடுத்தார்.*

*1 பேதுருவில், அப்போஸ்தலன் தன்னை "இயேசு கிறிஸ்துவின் அப்போஸ்தலனாகிய பேதுரு" என்று மட்டுமே அடையாளப்படுத்தினார். 2 பேதுருவில், சற்று கூடுதலாகக் குறிப்பிட்டார். "சீமோன் பேதுரு" என்பதுடன் இயேசு கிறிஸ்துவின் ஊழியக்காரனும் அப்போஸ்தலனும் என்று சொன்னார்.* NASB "bond-servant" *"ஊழியக்காரன்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள, இது ஒரு அடிமைக்கு கொடுக்கப்படும் பொதுவான கிரேக்க பட்டப்பெயர் (doulos). பவுலும் தனக்குத் தேவனோடு உள்ள நட்புறவை விளக்கப்படுத்த இந்த வார்த்தையைப் பயன்படுத்தினார் (ரோமர் 1:1; பிலிப்பியர் 1:1). "அப்போஸ்தலன்" எனும் வார்த்தை, சில வேளைகளில் "பன்னிருவரில் ஒருவர்" என்பதற்குச் சமமான சொல். நடபடிகள் 1:21-26ல், கிறிஸ்தவர்கள் ஏன் அப்போஸ்தலர்களின் எண்ணிக்கையை பன்னிரெண்டாக வைத்துக் கொள்ள விரும்பினார்கள் என்பதற்கு சில காரணங்கள் காணப்படுகிறது. "பன்னிருவர்"*

எனும் பதத்தை ஒரே ஒரு முறை மட்டுமே பவுல் பயன்படுத்தியிருக்கிறார் (1 கொரிந்தியர் 15:5). அதே சந்தர்ப்பத்தில் அவர் "பன்னிரெண்டுபேரை" "எல்லா அப்போஸ்தலர்களோடும்" சமப்படுத்தி பேசுகிறார் (1 கொரிந்தியர் 15:7). பின்னதாக வசனப்பகுதியில், அவர் கர்த்தருடைய சகோதரனாகிய யாக்கோபை அப்போஸ்தலரிடமிருந்து, வித்தியாசப்படுத்தியுள்ளார், கலாத்தியர் 1:19ல், யாக்கோபை மற்ற அப்போஸ்தலருடைய அதே வரிசையில் வைத்துக் குறிப்பிட்டாலும் அங்கே வேறுபடுத்தி காட்டுகிறார். "தேவனானவர் சபையிலே முதலாவது அப்போஸ்தலரையும் ... ஏற்படுத்தினார்" என்று எழுதின போதும், (1 கொரிந்தியர் 12:28), மற்றும் "அவர், சிலரை அப்போஸ்தலராகவும் ஏற்படுத்தினார்" என்று எழுதிய போதும் (எபேசியர் 4:11), அவர் "அப்போஸ்தலர்" எனும் வார்த்தையை "பன்னிருவருக்கு" சமமாக பொருள்படுத்தி எழுதினாரா இல்லையா என்று தெளிவாகத் தெரியவில்லை, பவுலும் தானே ஒரு அப்போஸ்தலன்தான் ஆனாலும் பன்னிருவரில் ஒருவரல்ல.

"அப்போஸ்தலன்" எனும் வார்த்தை புதிய ஏற்பாட்டில் சில வேளைகளில் குறிப்பிட்ட செயலுக்காக ஏற்படுத்தப் பட்டவர்களாகவும் வேறு சில வேளைகளில் பொதுவான அர்த்தத்திலும் பயன்படுத்தப்பட்டுள்ளதாகக் காணுகிறது. பொதுவாக, இந்த வார்த்தையின் பொருள், "அனுப்பப்பட்ட ஒருவன்," அல்லது ஒரு வகையில், "ஊழியத்திற்கென அனுப்பப்பட்ட ஒருவன்" என்றும் பொருள். அது அலுவலக ரீதியாக அனுப்பப்படுபவர் அல்லது ஒரு ஸ்தானாதிபதியாக அனுப்பப்படுபவர் என்றும் குறிப்பிடப்படலாம். அந்த அர்த்தத்தில் பவுலும் பர்னபாவும் "அப்போஸ்தலர்களாய்" இருந்தனர் (நடபடிகள் 14:4, 14). நடபடிகள் 14ல் அவர்கள் "அப்போஸ்தலர்கள்" என்று அழைக்கப்பட்டிருக்கலாம், ஏனெனில் அவர்கள் சிரியாவிலுள்ள அந்தியோகியா சபைக்கு "ஸ்தானபதிகளாய்" அனுப்பப்பட்டவர்கள். லூக்கா அதிகமாக பொதுப்படையான "அப்போஸ்தலர்" எனும் வார்த்தையை குறிப்பிடத்தக்க செயலினிமித்தம் ஏற்படுத்தப்பட்டவர்கள் எனும் பொருளில், "பன்னிருவரைக்" குறிப்பிடத்தக்கதாக எழுதினார். ஒருவேளை இந்தக் காரணத்தால் அவர் பவுலை ஒருபோதும் "அப்போஸ்தலன்" என்று அழைக்கவில்லை போலிருக்கிறது; நடபடிகள் 14:4, 14ல் பொதுவான பொருளில் மட்டுமே அழைத்தார். பவுலைப் பொறுத்தமட்டில், "அப்போஸ்தலன்" எனும் பதம் சபையில் அதிகாரத்திற்குரிய ஒரு செயலாகவே இருந்தது. இது கிறிஸ்துவுடன் கூட உள்ள தொடர்பை யூகிக்க வைக்கிற ஒரு உறவுமுறை, அதிலிருந்து அப்போஸ்தலனுக்குரிய அதிகாரம் வந்தது. "அப்போஸ்தலன்" எனும் பதம் பேதுரு பயன்படுத்தியது போல, பன்னிருவருக்கு அப்பால் ஒரு கூட்ட விசுவாசிகளுக்கு வழங்கப்பட்டதற்கான ஆதாரம் எதுவுமில்லை.[2]

பேதுரு ஒரு மென்மையான சமநிலையில் தனது அப்போஸ்தல அதிகாரத்தை ஒரு பக்கமும் அப்போஸ்தல அடையாளத்தை மறுபுறமும் தமது வாசர்களுக்கு முன்பாக நிர்வாகம் பண்ணினார். எங்களைப்போல அருமையான விசுவாசத்தைப் பெற்றவர்களுக்கு, என்று அவர் எழுதினார். விசுவாசிகளாகிய "மார்க்க அறிவு பெறாத பாமர மக்களுக்கும்," "சமயக் குருமார்கள்" என்று தங்களை அழைத்துக் கொண்டோருக்குமிடையே வித்தியாசம் பற்றி அப்போஸ்தலன் எதுவும் அறிந்திருக்க வில்லை.

அப்போஸ்தலனின் விசுவாசம் வாசகர்களின் "அதே வகையானதாகவே" இருந்தது. புதிய ஏற்பாட்டில், சில வேளைகளில் "விசுவாசம்" ஒரு சீஷன் கர்த்தரில் வைக்கும் தனிப்பட்ட நம்பிக்கையைக் குறிக்கிறது (எபிரெயர் 11:1), மற்றும் சில இடங்களில் ஒரு கூட்டத்தினரின் கிறிஸ்தவ உபதேசத்தைக் குறிக்கிறது (யூதா 3). இரண்டு அர்த்தங்களுமே வசனப்பகுதிக்கு பொருத்தமயிருக்கிறபடியால், அடுத்து வருவது பெயர்ச்சொல் எனக்குறிப்பிடும் துணைச்சொல் இல்லாமை ("விசுவாசம்" என்று உள்ளது, "ஒரே [The] விசுவாசம்" எனும் பொருளில் குறிப்பிடப்படவில்லை) என்பது பேதுரு தனது வாசகர்களை நினைப்பூட்டி அவர்கள் தங்கள் நம்பிக்கையை, உறுதியான நம்பிக்கையை, தேவனில் வைத்திருப்பதைக் குறிப்பிடுகிறார்.

இந்த வார்த்தைகளில் "ஒரு விசுவாசத்தைப் பெற்றவர்கள்" என்று பயன்படுத்தவில்லை, மாறாக பேதுருவின் புரிந்து கொள்ளுதலில் உணர்வுப் பூர்வமாக "விசுவாசத்தைப்" பெறுகிறவர்களாயிருப்பதைக் குறிப்பிடுகிறார். கிறிஸ்துவின் செய்தியை கேட்கும்போது கிறிஸ்தவர்கள் "விசுவாசத்தைப்" பெறுகிறார்கள், விசுவாசிக்கிறார்கள், கர்த்தரிலே தங்கள் நம்பிக்கையை வைக்கிறார்கள், "விசுவாசம்" என்பது தேவனிடத்திலிருந்து அற்புதவிதமாகக் கொடுக்கப்படுகிறதல்ல. சுவிசேஷம் பிரசங்கிக்கப்படும்போது ஒருவர் தெரிவு செய்து கொள்ளுதலின் முடிவே அது. லூக்கா "கொரிந்தியரில் அநேகரும் சுவிசேஷத்தைக் கேட்டு விசுவாசித்து, ஞானஸ்நானம் பெற்றார்கள்" (நடபடிகள் 18:8), என்றார், அவர்கள் தங்கள் நம்பிக்கையை கிறிஸ்துவிலே வைக்கும்படி தெரிவு செய்து கொண்டார்கள் என்று அவர் சொன்னதைத் தவிர வேறு எவ்வித சூட்சம அர்த்தத்தையும் கொடுக்கவில்லை. வித்தியாசப்பட்ட அடிப்படைகளில் வார்த்தைகளைப் பயன்படுத்துவதன் மூலம், ஆங்கிலத்தில் இந்த வார்த்தைகள் *(pistis),* பொருள் "விசுவாசம்," மற்றும் *pisteuō̄,* பொருள் "விசுவாசி (நம்பு)," ஆகியன பொதுவான கிரேக்க அடிப்படையிலிருந்து வருகிறது.

பேதுருவின் வார்த்தைகளை வாசிக்கும் கூட்டத்தார் தங்கள் விசுவாசத்தை பெற்ற விதம் **தேவனுடைய நீதியால், நீதியின் மூலம் அல்லது தேவனிடத்திலிருந்து வந்தது.** "நீதி" அல்லது "நீதிமானாக்கப்படுதல்" எனும் வார்த்தைகள் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த கிரேக்க வார்த்தைகளிலிருந்து மொழிபெயர்க்கப்பட்டவை, அந்த வார்த்தைகள் இந்த வசனப்பகுதியில் நீதியைக்கொடுக்கிறது. நீதிமானாக்கப்படுதல் என்றால் நீதியால் இருத்தல். இந்த வார்த்தைகள் பெரும்பாலும் சட்ட ரீதியான பொருளைக் கொடுப்பவை. ஒரு நீதிபதி வாதிக்கு சாதகமாக தீர்ப்பைக் கொடுக்கும் போது, வழக்கிலே வெற்றி பெற்றவர் "நீதிமானாக்கப்படுகிறார்." பவுல் பெரும்பாலும் இந்த அர்த்தத்திலே வார்த்தைகளைப் பயன்படுத்தினார். பிறருக்காக தம்மை பலியாக்கின கிறிஸ்துவினால் பாவி நீதிமானாக்கப்பட்டான். ஆகிலும் பேதுரு தனது மனதில் கொஞ்சமாகிலும் சட்டரீதியான வார்த்தையை தன்மனதில் கொண்டிருந்ததாகக் காணுகிறது. "தேவனுடைய நீதியால்," பேதுரு தேவனுடைய நீதியும் செம்மையுமான வழியைக் குறிப்பிட்டார். இந்த நிருபத்தின் வாசகர்கள் தேவன் நீதியாய் செயல்பட்டதால் விசுவாசத்தைப் பெற்றுக் கொண்டனர் - அதாவது, அவர் வாக்குத்தத்தம் செய்ததில் உண்மையுள்ளவராயிருந்திருந்தார். அவருடைய நீதியும் அவருடைய

அன்பும் இயேசு கிறிஸ்துவின் நபர்த்துவத்தில் சந்தித்தது, அவர் பாவத்திற்கு நிவாரணத்தைச் செலுத்தி தேவனோடு சமாதானத்திற்கான கதவைத் திறந்தார்.

வசனத்தின் கடைசி பகுதிக்கு விளக்கமளிப்பது கடினம். அது "தேவனுடைய நீதியா, நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நீதியா? இந்தப் பொருளைத்தான் KJV கொடுக்கிறது." "நமது" என்ற வார்த்தை *(hēmōn)* ஒரே ஒரு முறைமட்டுமே இடம் பெற்றுள்ளது அது நியாயமாக "நமது தேவன்" என்றோ (NASB) அல்லது "நமது இரட்சகர்" என்றோ (KJV) பொருள் கொள்ளலாம். இருப்பினும், கிரேக்கச் சொல்லமைப்பில் பயன்படுத்தப்பட்டுள்ள வார்த்தை தேவனையே பொருள்படுத்துகிறது. இந்தக் காரணம், உபதேசக் கோட்பாடுகளுடன் இணைந்து, NASB நம்முடைய "தேவனுடைய நீதியிலும்," இரட்சகராகிய இயேசு கிறிஸ்துவின் நீதியிலும் என்று மொழிபெயர்க்க வழிநடத்தியது. அது, சந்தேகமில்லாமல் சரியான பொருளையுடையது தான்.

நசரேயனாகிய இயேசுவை தேவனாகவும் இரட்சகராகவும் பேதுரு புரிந்து கொண்டார். இந்த நிருபத்தில் நான்கு முறை (1:11; 2:20; 3:2, 18), "கர்த்தர் மற்றும் இயேசு" எனும் வார்த்தையைப் பயன்படுத்தியுள்ளார், அந்த குறிப்புரை வசனம் தேவத்துவத்தில் ஒருமையைக் குறிப்பிடுகிறது. பேதுரு பயன்படுத்தியுள்ள வார்த்தை இயேசு ஒரு சிருஷ்டிக்கப்பட்டவராகவோ தெய்வீகத்திற்குக் குறைவானவராகவோ எண்ணுவதற்கு எந்த ஒரு இடமும் அளிக்கவில்லை.[3]

**வசனம் 2.** தனது வாசகர்களை அடையாளப்படுத்திய பின், அவர்களுக்காக அப்போஸ்தலன் ஒரு சிறிய ஜெபத்தை ஏறெடுத்தார். கிருபையும் சமாதானமும் பெருகக் கடவது என்று 1 பேதுரு 1:2ல் சொல்லப்பட்ட கிரேக்க வார்த்தைகளுக்குச் சமமாகச் சொல்லியிருந்தாலும், இங்கே தேவனையும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவையும் அறிகிற அறிவினாலே என்ற வாக்கியத்தை சேர்ந்திருக்கிறார். நிருபம் தொடர்ந்து வாசிக்கப்படும் போது, பேதுரு தெரிவுசெய்துள்ள வார்த்தையாகிய "அறிவு" ஒரு திடீரென தோன்றிய வார்த்தையல்ல. என்பது தெளிவாகத் தெரியும். இந்த வார்த்தை அடுத்த சில வசனங்களில் மேலும் நான்கு முறை காணுகிறது. அப்போஸ்தலன் வார்த்தையின் பலமான அமைப்பைப் பயன்படுத்துகிறார், அது *epignōsis,* இந்த வார்த்தை *gnōsis* என்ற பொதுவான வார்த்தைக்குப் பதிலாகப் பயன்படுத்தப்பட்டது.

அதிகாரம் 2ல் கள்ளப் போதகர்கள் தங்களுக்கென ஒரு "அறிவு" இருப்பதாகவும் அவர்கள் பேசுவதற்கும் (அவர்களுடைய வார்த்தைகள்) கேட்கப்படுவதற்குமான உரிமை பெற்றிருந்ததாகவும் விளக்கமளித்ததாகத் தெரிகிறது. அவர்களைப் பற்றிய பேதுருவின் வரைவு பட விவரம் அவர்கள் எந்தப்பகுதியில் உயர்ந்த அறிவைப் பெற்றிருக்கிறார்கள் என்கிற விவரத்தைக் குறிப்பிட்டுச் சொல்லி அடையாளப்படுத்துவது கடினமானது. 2 பேதுருவின் மறையியல் ஞானிகளின் உபதேசங்களை வாசித்து விட்டு இரண்டாம் மூன்றாம் நூற்றாண்டுகளில் வந்த மார்க்க விரோதிகளான அவர்களுடைய கொள்கைகளை புரிந்து கொள்வது இயலாதது. அந்தப் போதகர்கள் தங்களுக்கு விசேஷித்த ஞான அறிவு இருப்பதாகவும் அதுவே தொகுப்பு உபதேசக் கோட்பாடுகளையும் மென்மையாக உறுதிசெய்யப்பட்டதாகவும்

*உரிமை கோரினார். சில புதிய ஏற்பாட்டு விளக்கவுரையாளர்கள் வசனப்படுகுதியில் "அறிவு" என்பதை எங்கு கண்டாலும் மறையியல் ஞானம் என்பதாகவே காண்கின்றனர். இப்படிப்பட்ட தொடர்புகளை நியாயப்படுத்துவது கடினமானது. 2 பேதுருவில் குறிப்பிடப்படுகிற கள்ளப் போதகர்களுக்கும் இரண்டாம் நூற்றாண்டு மறையியல் ஞானத்தைப் போதிக்கிறவர்களுக்குமிடையேயான தொடர்பு மெல்லிய நூல் கொண்டு கட்டப்பட்டதாக இருக்கிறது.*

---

**குறிப்புகள்**

*[1]"சீமோன்" என்பதை "சிமியோனுக்கு" மேலாகத் தெரிவு செய்வது "சீமோன்" என்பது தான் வசனரீதியான ஆதாரமுடையது என்பது மொழிபெயர்ப்பாளர்கள் கருதுவதாக நினைக்க வேண்டிய அவசியமில்லை. சில மொழிபெயர்ப்புகள் ஏதாவது ஒரு திருமறைப் பெயரையோ இடத்தையோ மட்டும் வார்த்தைக் கூட்டெழுத்தைக் கொடுத்து குழப்பத்தைத் தீர்க்க எண்ணுகின்றனர்.* [2]"Apostle" would hardly be a designation for either a female or a male, as is alleged by James Walters. (James Walters, "'Phoebe' and 'Junia(s)'—Rom. 16:1–2, 7," in *Essays on Women in Earliest Christianity*, ed. Carroll Osburn [Joplin, Mo.: College Press, 1993], 1:185–90.) There is little justification for the conclusion of John Painter that the status and authority of the apostolic office went beyond the Twelve. (John Painter, *Just James: The Brother of Jesus in History and Tradition* [Minneapolis: Fortress Press, 1999], 60.) It is significant that Paul acknowledged the exceptional circumstances that resulted in his having apostolic authority (1 Cor. 15:8–10) even if he did not have the status of "the twelve." *[3]இது நான்காம் நூற்றாண்டில் ஆரியன் பிரிவினரின் போதனைகளால் பொழியப்பட்டக் கருத்து.*